

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் காமேஸ்வரம் கிழக்கு தூயசெபஸ்தியர் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்பட்ட முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கிஸ் ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், ஒன்றியக் குழு தலைவர் செல்வராணிஞானசேகரன் மற்றும் பலர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் 100! நூற்றாண்டு நிறைவு பெருவிழா பொது உறுப்பினர்கள் கூட்டம் பூமணம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஆ.இராசா.எம்.பி. கே.என்.அருண்நேரு. எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட கழகச் செயலாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில்,

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு பெருவிழா பொது உறுப்பினர்கள் கூட்டம்!

**ஆ.இராசா எம்.பி. - கே.என்.அருண்நேரு எம்.பி. சிறப்புரை! மாவட்டச் செயலாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!**

பெரம்பலூர், ஜூலை 18 - பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் 100! நூற்றாண்டு நிறைவு பெருவிழா பொது உறுப்பினர்கள் கூட்டம் பூமணம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஆ.இராசா.எம்.பி. கே.என்.அருண்நேரு.எம்.பி. சிறப்புரையாற்றினார்கள்.

மாவட்ட கழகச் செயலாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி.எஸ்.பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், தொ.மு.ச.மு.ராஜகாந்தம், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை தலைவர் எம்.ரெங்கராஜ், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பேரவை தலைவர் கே. கே.எம்.குமார், தொ.மு.ச. கவுன்சில் பேரவை மாவட்ட செயலாளர் ஆர். ரெங்கசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல்பாருக், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஆர்.தங்கராசு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட மகளிர் அணி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம்,மு. விஜயரத்தினம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. ராசா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், வழக்கறிஞர் கண்ணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் நன்றியுரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அது வருமாறு:

அரசுப்பள்ளிகளில் காலை உணவு திட்டம் வழங்கியதுபோல, அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு திட்டம் வழங்கி கல்விக்கு கண் திறந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை இந்த செயற்குழு பாராட்டி மகிழ்கிறது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதியில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளில், கே.என். அருண்நேருவிற்கு அதிகளவில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் 85 ஆயிரம் வாக்குகள் பெற்றுத் தந்த பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து நிலை நிர்வாகிகளுக்கு பாராட்டையும், வாக்களித்த வாக்காளர்களுக்கு இந்த செயற்குழு நெஞ்சார்ந்த நன்றி யையும் தெரிவித்துக் கொள்கிறது.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையில் கிராமங்கள் தோறும் பட்டிமன்றம்,கருத்தரங்கம், பொதுக்கூட்டம், தெருமுனைக் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று அனைத்து நிலை நிர்வாகிகளையும் இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற தொல்.திருமாவளவன் ஆகியோரை வெற்றி பெற செய்த அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், வாக்களித்த வாக்காளர்களுக்கும் இந்த செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அன்னியூர் சிவா அவர்களை வெற்றி பெற செய்த அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், வாக்களித்த தொகுதி மக்களுக்கும் இந்த செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

இரங்கல் தீர்மானங்கள்!

கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி. உதவியாளர் சிதம்பரம் மனைவி சௌந்தரம் மறைவிற்கும், மாவட்ட துணைச் செயலாளர் நூருல்ஹிதா இஸ்மாயில் சகோதரர் முகமது யாகூப் மறைவிற்கும், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி. காட்டுராசா தந்தை சின்னப்பிள்ளை மறைவிற்கும், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம், ஆதனூர் ஊராட்சி மதுரா குடிக்காடு கிளைச் செயலாளர் பழனியப்பன் மறைவிற்கும், வேப்பூர் வடக்கு ஒன்றியம்,வடக்கலூர் அக்ரகாரம் கிளைச் செயலாளர் சின்னதுரை சகோதரர் கனகசபை மறைவிற்கும், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் இளஞ்செழியன் தாயார் அடைக்கம்பட்டி செல்வம் மறைவிற்கும், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், காந்தி நகர் கிளைச் செயலாளர் செல்வன் தாயார் ராஜேஸ்வரி மறைவிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### தஞ்சை மாவட்டம் - வளம்பக்குடி அருகே

# சாலை விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதியுதவி - ஆறுதல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 18 - தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வளம்பக்குடி அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வளம்பக்குடி அருகில் நேற்று (17.07.2024) காலை சுமார் 7.00 மணியளவில் கந்தர்வகோட்டையில் இருந்து சமயபுரம் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றுகொண்டிருந்தவர்கள் மீது எதிர்பாராதவிதமாக ஈச்சர் வாகனம் மோதிய விபத்தில் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டியைச் சேர்ந்த முத்துசாமி (வயது 60) த/பெ.சின்னையன், திருமதி. ராணி (வயது 37) க/பெ. முருகன், திருமதி. மோகனாம்பாள் (வயது 27) க/பெ. ரமேஷ் மற்றும் திருமதி. மீனா (வயது 26) க/பெ. கார்த்திக் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், இவ்விபத்தில் திருமதி. தனலட்சுமி (வயது 36) க/பெ. செல்வராஜ் என்பவர் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில், பலத்த காயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் திருமதி. சங்கீதா க/பெ.கவியரசன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### மகாராஷ்டிரா அரசியலில் திருப்பம்:

# அஜித் பவார் கட்சியிலிருந்து 4 முக்கிய தலைவர்கள் விலகல்!

மும்பை, ஜூலை 18 - மகாராஷ்டிரா மாநிலத்தில் மக்களவைத் தேர்தல் தோல்வியின் எதிரொலியாக அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியிலிருந்து நான்கு முக்கியத் தலைவர்கள் விலகி இருப்பது அக்கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

பிம்ப்ரி சின்ச்வாட் பகுதியைச் சேர்ந்த நான்கு முக்கியமான தலைவர்கள் அஜித் பவாரின் என்.சி.பி. அணியில் இருந்து வெளியேறி மூத்த தலைவர் சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி அணியில் சேர உள்ளனர்.

இதனால் அஜித் பவாருக்கு சிக்கல் உண்டாகியுள்ளது. பிம்ப்ரி சின்ச்வாட் பிரிவின் தலைவரான அஜித் கவாஹனே, மாணவர் தலைவர் யாஷ் சானே மற்றும் ராகுல் போஸ்லே, பங்கஜ் பாலேகர் ஆகியோர் அஜித் பவார் அணியில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதுகுறித்து அஜித் கவாஹனே கூறுகையில், “நான் நேற்று ராஜினாமா செய்தேன். நாங்கள் மற்றொரு சட்டப்பேரவைத் தொகுதியில் அனைத்து முன்னாள் உறுப்பினர்கள் அனைவரும் சந்திக்க இருக்கிறோம். அங்கு எங்களின் அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் குறித்து நாங்கள் முடிவெடுப்போம். நாங்கள் பவார் சாஹேப்பின் (சரத் பவார்) ஆசிர்வாதத்தை பெறப் போகிறோம். நாங்கள் இணைந்து முடிவெடுப்போம்.” என்று தெரிவித்தார்.

மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்பாக அஜித் பவாரின் அணியில் இருந்து மீண்டும் சரத் பவாரின் அணிக்குத் திரும்பலாம் என்ற ஊகத்திற்கு மத்தியில் இந்த ராஜினாமா நிகழ்ந்துள்ளது.

முன்னதாக, ஜுன் மாதம் சரத் பவார், கட்சியினை பலவீனப்படுத்த முயற்சித்தவர்களுக்கு கதவுகள்மூடப்பட்டுவிட்டது, என்றாலும் கட்சியின் பெயரினை களங்கப்படுத்தாமல் அமைப்பினை வலுப்படுத்தக்கூடிய தலைவர்கள் வரவேற்கப்படுகிறார்கள் என்று தெரிவித்திருந்தார்.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில், அஜித் பவார் நான்கு தொகுதிகளில் போட்டியிட்டு ராய்கட்டில் மட்டும் வெற்றி பெற்றது. சரத் பவாரின் கட்சி மக்களவைத் தேர்தலில் எட்டு இடங்களில் வென்றது. இந்த ஆண்டு இறுதியில் மகாராஷ்டிராவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடக்க இருக்கிறது.

கடந்த 2023ம் ஆண்டு அஜித் பவார் தனது ஆதரவு எம்.எல்.ஏ.க்களுடன் சரத் பவாரிடமிருந்து பிரிந்ததால் தேசியவாத காங்கிரஸ் கட்சி இரண்டு அணியாக பிளவுபட்டது. சரத் பவார் எதிர்க்கட்சிகளுடன் இருந்தநிலையில், அஜித் பவார் ஏக்நாத் ஷிண்டே கூட்டணியில் இணைந்து துணைமுதல்வரானார்.

2024ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் மகாராஷ்டிராவில் பா.ஜ.க. முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ சேனா, அஜித் பவார் தலைமையிலான என்.சி.பி. கூட்டணியான மஹாயுதி மொத்தமுள்ள 48 தொகுதிகளில் 17 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

மறுபுறம், காங்கிரஸ், சிவ சேனா (உத்தவ் தாக்கரே அணி), என்.சி.பி.(சரத் பவார்) கட்சிகளின் மஹா விகாஸ் அகாதி கூட்டணி 30 இடங்களைக் கைப்பற்றி இருந்ததது குறிப்பிடத்தக்கது.

### மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன!

# தமிழ்நாட்டில் மக்களுக்கான ஆட்சியை நடத்துகிறார் முதல்வர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஜூலை 18 - போலீசார் பிடியிலிருந்து ரவுடிகள் தப்பித்து போகும் போது அவர்களை காவல்துறை சுட்டுதான் பிடிக்க வேண்டும்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் சம்பவம் நடந்த போது அவரை கொலை செய்த நபர்கள் தான் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடகா அரசு 8000 கன அடி தண்ணீர் தான் திறந்து விட முடியும் என்று கூறினாலும் நாங்கள் காவேரி நதிநீர் ஆணையம் ஒழுங்காற்று குழு ஆகியவற்றுடன் மேல்முறையீடு செய்வோம்

தண்ணீர் தொடர்பாக இரு மாநிலத்திற்கும் பிரச்சினை ஏற்பட்டால் மத்திய அரசுதான் தீர்க்க முடியும். அண்ணாமலை எதை வைத்துக் கூறுகிறார் என்பது தெரியவில்லை.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் தி.மு.கவும் ஓட்டுக்கு பணம் கொடுக்கவில்லை. பா.ம.க.வும் ஓட்டுக்கு பணம் கொடுக்கவில்லை. ஆனால் அ.தி.மு.க. ஓட்டுக்கள் எங்களுக்கு கிடைத்துள்ளது.

மக்கள்தான் ஓட்டு போட்டு எங்களை தேர்ந்தெடுத் துள்ளனர். அ.தி.மு.க. ஓட்டு தங்களுக்கு விழும் என்று பா.ம.க.வினர் நினைத்தனர் ஆனால் அது நடக்கவில்லை.

இப்போது இருக்கும் சட்டத்தின்படி 356 யை பயன்படுத்தி எந்த மாநிலத்தையும் கலக்க முடியாது. குறிப்பாக தற்போது பா.ஜ.க.விற்கு நாடாளுமன்றத் தனிப்பெரும்பான்மை மெஜாரிட்டி இல்லை.

தமிழகத்தில் மக்கள் பாதுகாப்பாக உள்ளனர். மக்களுக்கான ஆட்சி நடைபெற்றுள்ளது. மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இந்த அரசை அசைக்க எந்த கட்சியாலும் முடியாது.

சசிகலா சுற்றுலா செல்ல விரும்பி உள்ளார் அதனால் அவர் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார் அது அவருடைய பிரச்சினை. இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தில் பெண்களுக்கு இலவச சட்ட சேவை மையம்!

சென்னை, ஜூலை 18 - தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தில் பெண்களுக்கு இலவச சட்ட சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையமும் இப்பணிக்கான ரூ.2 லட்சம் நிதியுதவிக்கான அனுமதியை தேசிய மகளிர் ஆணையத்திடம் இருந்து பெற்று மாநில இலவச சட்டப்பணிகள் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைந்து, இலவச சட்ட சேவை மையத்தை 15ம் தேதி முதல் அதன் அலுவலகத்தில் அமைத்துள்ளது. இந்த மையத்திற்கு மாநில இலவச சட்டப்பணிகள் ஆணைக்குழு வாயிலாக வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர்.

வாரத்தில் 5 நாட்கள் திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 2 மணி முதல் 5 மணிவரை இந்த மையம் செயல்படும்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் சார்பாக அமைக்கப்பட்டுள்ள இந்த மையம் பாதிக்கப்பட்ட மகளிருக்கு நீதித்துறை நிர்வாகத்தின் கீழ் பல்வேறு நிலைகளில் செயல்படும் அதன் அமைப்புகள் மற்றும் அவற்றின் பணிகள் குறித்து தெரிவித்து அவர்களின் பிரச்சினைகளுக்கு சிறப்பான தீர்வுகளை பெறுவதற்கு உதவும் ஒற்றைச் சாளர அமைப்பாக செயல்படும்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தொ.மு.ச. இணைப்பு சங்கமான சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் த.சரவணகுமார், சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 16.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தொகுதி வடக்கு அண்டக்குடியில் பல்நோக்கு வணிக வளாகத்தை சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், கிழக்கு ஒன்றியச் செயலாளர்,வே.தமிழ்மாறன்,கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், குருக்கள் பட்டியைச் சேர்ந்த த.வெள்ளத்துரை அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 16.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகராட்சி மைய அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் திருஉருவப் படத்திற்கு மேயர் (பொறுப்பு) கே.ஆர்.ராஜு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.